**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| STC No. | : 20/2020 |
| Name | : Pankajavalli |
| D.W. | : 2 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.11.2024

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் எதிரி ஆவேன். நான் பொள்ளாச்சி நேதாஜி ரோட்டில் வசித்து வருகிறேன். நான் பொள்ளாச்சி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கிற்கும் எனக்கும் சம்மந்தம் இல்லை. இந்த வழக்கை என் மீது பொய்யாக போடப்பட்டுள்ளது. கஜேந்திரன் என்பவரை யார் என்றே எனக்கு தெரியாது. என்னுடைய காசோலையை நான் முன்பு பணி செய்த திவான்சா புதுர் அரசு உயர்நிலைப் பள்ளியில் என்னுடன் பணியாற்றிய ராமகிருஷ்ணன் என்ற ஆசிரியருக்கு பணம் தேவைப்பட்டதால் அவர் உடுமலைப்பேட்டை நகர்மன்ற நடுநிலைப் பள்ளியில் ஆசிரியராக பணியாற்றி செந்தில் குமார் ஆசிரியரிடம் பணம் கேட்டிருந்தார். அதற்கு ஜாமீன் போட வேண்டி என்னை அழைத்தார். அப்போது நான் 2 காசோலையை கொடுத்தேன். ஒரு காசோலையில் கையெழுத்து போட்டிருந்தேன். இன்னொரு காசோலையில் கையெழுத்து போடவில்லை அதில் கையொப்பம் செய்த காசோலையை கொண்டு பாபு என்ற நபரைக் கொண்டு உடுமலை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல்

செய்துள்ளார்கள். மற்றொரு கையொப்பம் செய்யாத காசோலையைக் கொண்டு அவர்களே கையெழுத்து செய்து கஜேந்திரன் மூலமாக இந்த நீதிமன்றத்தில் என் மீது பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். முதன் முதலாக இந்த நீதிமன்றத்திற்கு வந்தபோது புகார்தாரர் கஜேந்திரன் என்னைப் பார்த்து நீங்கள் தான் பங்கஜவள்ளியா என்று என்னைப் பார்த்து கேட்டார். நான் வழக்கு விசாரணைக்காக நீதிமன்றத்திற்கு வந்த போது இரண்டு பேர் என்னிடம் வந்து ரூ.6 லட்சம் காசோலை வழக்கை ரூ.4 லட்சத்திற்கு முடித்துக்கொள்ளலாம் என்று கூறி சமரசம் பேசினார்கள். இல்லையென்றால் வேலை போய் விடும் என்று மிரட்டினார்கள். கஜேந்திரன் யார் ? என்றே எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பு.சா.ஆ.1 வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் பு.சா.ஆ.4 அஞ்சல் ஒப்பகை அட்டையில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் என்னுடையதுதான். எனவே இந்த வழக்கில் இருந்து என்னை விடுதலை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K
Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2024.11.28 17:14:09 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்